**சுருக்கம்**

தொடக்கக் கல்வித் துறை- உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள்- ஓய்வு பெறும் நாள்- ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக்கல்வித் (ஜி) துறை

அரசாணை(நிலை )
எண். 11 நாள்: 09.02.2004.

படிக்கப்பட்டவை:-

1) தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6 கடிதங்கள் நக எண்.29112/இகே2/2001 நாள் 14.8.2001, 20.6.2002, 22.8.2002 மற்றும் 25.3.2003.

2) மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-35 அவர்களின் கடிதம் எண். AG(A)IISC/ DPcell/IV/FN15/2001-2002/150 நாள் 2.5.2002.

\- - - - - - -

<u>ஆணை:-</u>

தொடக்கக் கல்வி இயக்குநர் பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட தனது கருத்துருவில், உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களும், நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களும், ஒத்த பணியிடங்கள் என்ற அடிப்படையில் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஓய்வு பெறும் வயதினையடைந்த பின்னரும் ஆசிரியர்களைப் போன்று கல்வியாண்டு முடியும் வரை பணிநீட்டிப்பு இதுவரை வழங்கப்பட்டு வருவது சார்ந்து கீழ்க்கண்ட கருத்தினைத் தெரிவித்திருந்தார்:-

(அ). ஆசிரியர்களுக்கு கல்வி ஆண்டின் இடையில் பணி ஓய்வு அனுமதிக்கப்பட்டால், கல்விப் பணிகள் பாதிக்கும் என்பதால் பணிநீட்டிப்பு வழங்கப்படும் நிலையில், பள்ளிகளின் ஆய்வுப் பணிகள், பார்வைகள் மற்றும் அலுவலக நடைமுறைப் பணிகளை மேற்கொள்ளும் கூடுதல் / உதவித்

தொடக்கக் கல்வி அலுவலர்களின் பணிகள், அவர்கள் அக்கல்வியாண்டின் இடையில் ஓய்வு பெற்றாலும் எவ்விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை.

(ஆ). உதவி / கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், பணியாளர்கள் நிர்வாகப் பணிகளை மேற் கொள்ளுவதால், அவர்களுக்கு பணிநீட்டிப்பு வழங்குவது சரியானதல்ல என மாநிலக் கணக்காயரால் தடை எழுப்பப்பட்டுள்ளது. அதனைப் பின்பற்றுவது மிகவும் அவசியமானதாகும்.

எனவே, உதவி / கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு கல்வியாண்டு இடையில் பணி ஓய்வு பெற்றாலும், கல்வியாண்டு முடியும் வரை பணிநீட்டிப்பு வழங்கும் தேவை எழவில்லை என்றும், பணிநீட்டிப்பை நீக்குதல் செய்து ஆணை வழங்கலாமெனவும், மேலும், இவர்கள் கல்வி ஆண்டு முடியப் பணிநீட்டிப்பில் பணியாற்ற விரும்பினால், அந்தக் கல்வி ஆண்டில் நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொண்டு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பணி மாறுதல் பெற்றுச் செல்லலாம் எனவும் தொடக்கக் கல்வி இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார்.

2. தொடக்கக் கல்வி இயக்குநருடைய கருத்துருவின் அடிப்படையிலும், 1995-96ம் கல்வியாண்டிலிருந்து உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களுக்குத் தொடக்கக் கல்வி இயக்குநரால் கல்வியாண்டு முடிவு பெறும் வரையில் மறுநியமன ஆணை வழங்கப்பட்டு, மாநிலக் கணக்காயரால் அதற்குத் தணிக்கைத் தடை எழுப்பப்பட்டுள்ள நிலையில், இந்த நிகழ்வு குறித்து அரசால் கவனமாய் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

(i). உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்கள் நிர்வாகப் பணியிடங்கள் என்பதால் 2004-2005ஆம் கல்வியாண்டு முதல், இப்பணியிடங்களில் நியமிக்கப்படுபவர்களுக்கு கல்வியாண்டு முடியும் வரை இனிபணி நீட்டிப்பு வழங்கப்பட மாட்டாது.

(ii). உதவி தொடக்கக் கல்வி அலுவலர் பதவியும் நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவியும் ஒத்த பதவிகள் என்ற அடிப்படையில், 1995-96ம் கல்வியாண்டு முதல் ஆசிரியர்களைப் போன்று உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு கல்வியாண்டு இறுதிவரை தொடக்கக் கல்வி இயக்குநரால் மறுநியமன ஆணை வழங்கப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கப்படுகிறது.

(iii). தற்போது பணியிலிருக்கும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள், தாங்கள் கல்வியாண்டு முடிய பணிநீட்டிப்பில்

பணியாற்ற விரும்பினால், அந்த கல்வியாண்டின் தொடக்கத்தில் நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொண்டு, நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாக பணிமாறுதல் பெறலாம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கு.ஞானதேசிகன்,

அரசு செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர்,சென்னை-18
மாநிலக் கணக்காயர்,சென்னை-35.

நகல்
பள்ளிக்கல்வி இயக்குநர்,சென்னை-6.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை,சென்னை-9.
நிதித்துறை,சென்னை-9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.